[8th September 1970

Rice Mills

*81. *Q*.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(*a*) whether it is a fact that numerous Rice Mills in Thanjavur District are lying idle for want of paddy on Government Account for hulling ; and

(*b*) if so, the action taken by the Government thereon ?

அரிசி ஆலைகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு-வணிக வரி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரிசி அரைவைக்காக அரசின் கணக்கில் நெல் இல்லாத காரணத்தினால் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலைகள் பல வேலையின்றி உள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. பி.யு. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Sale of Paddy in auction

*82. *Q*.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(*a*) whether it is a fact that the West Thanjavur District Development Council has requested the Government during May, 1970 to utilise the profit obtained by selling paddy in auction in deficit districts for the development of Thanjavur District ; and

(*b*) if so, the action taken thereon ?

ஏலத்தில் நெல் விற்பனை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு-வணிக வரி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) நெல் பற்றாக்குறை உள்ள மாவட்டங்களில் ஏலத்தில் நெல் விற்கப்படுவதன் மூலம் கிடைக்கும் ஆதாயத்தை தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டி மேற்குத் தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சி மன்றம் 1970 மே திங்களில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. பி.யு. சண்முகம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

8th September 1970]

திரு. ஜி. சுவாமிநாதன் : மதுரைக் கிடங்கிலுள்ள அரிசி வெளி மார்க்கெட்டுகளில் டெண்டர் மூலமாக ஏலம் போடப்பட்டதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அந்த மாதிரி மதுரைப் பகுதியில் ஏலம் போடப்பட்டதா ? கேரளத்திற்கு ஏல முறையில் அரிசி அனுப்பப் பட்டதா? அப்படியிருந்தால் தஞ்சை மாவட்டத்திலிருந்து 75 சத வீதம் அரிசி கண்ட்ரோல் விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறது. அதிக விலைக்கு அவை விற்கப்பட்டிருப்பதால், அதிக லாபம் வந்திருக்க வேண்டும். அந்த லாபம் தங்கள் மாவட்டத்தைச் சேர வேண்டுமென்று தஞ்சை மாவட்ட வளர்ச்சிக் குழு கேட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. பி.யு. சண்முகம் : மாவட்ட வளர்ச்சிக் குழு தீர்மானம் போடவில்லை. பொதுவாக அப்படி விவாதித்ததாக அரசாங் கத்திற்குத் தகவல் வந்திருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலிருந்து குறுவை நெல் எடுத்துச் செல்லப்பட்டது என்றாலும், பெரும் பகுதி சில மாவட்டங்களில் அதாவது வட ஆர்க்காடு, தென்னார்க்காடு போன்ற மாவட்டங்களில் அதைச் சாகுபடி செய்திருக்கிறார்கள். அவற் றின் விலை கட்டுப்படியாயிருக்கிறதா, அரிசி லாபகரமாக விற்றிருக்கி றதா என்று இன்னும் கணக்குப் பார்க்கவில்லை. அனேகமாக லாபம் இருப்பதற்கு வழியில்லை என்று நினைக்கிறேன். ஏனென்றால் பச்சை அரிசி குறைந்த விலையில் போயிருக்கிறது. அதிக விலைக்கு அப்படிப் போயிருந்தாலும், சிவில் சப்ளை இப்போது மிகுந்த நஷ்டத்தை ஏற்றுக்கொண்டிருப்பதால், உறுப்பினர் கூறும் யோசனையை இப்போது ஏற்பதற்கில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : அரிசி கெட்டுப் போனதால்தான் அரசாங் கத்திற்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவை கெட்டுப்போகிற அளவுக்கு அதிகமாக ஏன் ''ஸ்டாக்'' வைத்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் யோசித்ததா ?

மாண்புமிகு திரு. பி. யு. சண்முகம் : குறுவை நெல்லைப் பொறுத்த வரையில் அது மழை காலத்தில் அறுவடை செய்து கொண்டு வர வேண்டிய பயிர். அதனால் அதைச் சரியாகக் காய்ச்சல் போட வழி யில்லாமல் இருக்கிறது. அதற்கு யார் மீதும் குற்றம் சொல்வதற்கில்லை. இயற்கை மீதுதான் குறை சொல்ல வேண்டும். ஆனால் அரசாங்கம் அப்படிக் கையிருப்பு வைத்திருந்ததால்தான், டீ-கண்ட்ரோல் செய்ய முடிந்தது. வெளி மாநிலங்களுக்கு 50 ஆயிரம் டன்னுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி தந்திருக்கிறோம்.

Sales Tax Arrears

*83. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(*a*) the total amount of sales tax arrears in the State as on 31st March, 1970 ; and

(*b*) the steps proposed to be taken by the Government to collect the arrears ?